# கரந்தைத்தமிழ்ச் சங்கம்

(காப்புப்பெற்றது)

## தஞ்சை

விரோதிகிருது, வைகாசி, க-ல் நிறுவப் பெற்றது. (14—5—1911)

## பத்தாம் ஆண்டின் அறிக்கை.

சித்தார்த்தி (தை)—இரௌத்திரி (மார்கழி)



திரு. வே. இராதாகிருட்டின பிள்ளை, பி.ஏ.
சங்கம் நிறுவிய துங்கன்.

ஜெகம் அண்டு கம்பெனி அச்சுக்கூடம், திரிசிரபுரம்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ் மொழி போற்றும்

## தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதிற்
றக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

தமிழ் மொழி போற்றும்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

(காப்புப்பெற்றது)

## தஞ்சை.

---

## பத்தாம் ஆண்டின் அறிக்கை.

### சித்தார்த்தி (தை)—இரௌத்திரி (மார்கழி.)

---

செந்தமிழ்ச் சீரியீர் !

முழுமுதற்பெருமான் திருவருட்பெருக்கால், உயர் தனிச் செம்மொழிகளின் தலைமணிப் பெருமொழியாகிய தெய்வச் செந்தமிழ்த் தாயின் திருவடிப் பணிபோற்றும் நம் சங்கத்தின் **பத்தாம் ஆண்டு** நன்கு நிறைவுற்றது. இப்பத்தாம் ஆண்டில், சங்க உறுப்பினர்களும், ஏனைத்தமிழன்பர்களும் தங்கள் தங்கள் தாய்மொழித் தொண்டாம் தலைக்கடனை உள்ளக் கனிவொடு புரிந்து வந்ததின் பயனாக, ஒன்பதாம் ஆண்டு விழாவையுள்ளிட்ட பல பொதுக்கூட்டங்களும், தொழிற்கூட்டங்களும், கல்லூரி, நூல்நிலைய நிகழ்ச்சிகளும், பிறவும் ஆகிய சங்க வேலைகள் இனிது நிகழ்ந்துள. அவையிற்றைச் சுருக்கி வெளியிடுகின்றோம்.

### ஒன்பதாம் ஆண்டின் திருவிழா.

இத்திருவிழா, இரௌத்திரி யாண்டு ஆவணித்திங்கள் ௬-ம் நாள் (21-8-20) சனிக்கிழமை, திரு. **கந்தப்பச்செட்டியார்** அவர்கள் அற வீட்டில், தூதுக்குடி, திருவாளர் **எஸ். சோமசுந்தரபாரதியார்** அவர்கள், எம்.ஏ., பி.எல்., தலைமையில் நிகழ்ந்தது. உள்ளூர், வெளியூர்களிலிருந்து தமிழ்ப்புலவர்களும், தமிழன்பர்களும் பலப்பலர் வந்திருந்தனர். அவைத் தலைவர் மிகு சிறப்புடன் வரவேற்கப்பெற்று, உயரிடத்தமர்ந்து, தமது முன்னுரையில் செந்தமிழ்மொழியின் சிறப்புக்களைத் தெளிய எடுத்துரைத்தனர். பின், சங்க அமைச்சர் ஆண்டின் அறிக்கையினைப் படித்து, அதனை யாவர்க்கும் வழங்குவித்தனர். அதன்பின்னர், ஆங்குக் குழீஇய தமிழ்மக்கள் கீழேகாணும் முடிவுகளைச் செய்தனர்.

## முடிவுகள்.

க. கோல்கோண்டது தங்களைப் புரந்துவரும் மிகுமாட்சி தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மன்னருக்கு இப்பெருங்கூட்டத்தார் தங்கள் கோப்பற்றுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இம்முடிபு மாட்சிமிக்க சென்னை ஆட்சியாளருக்கு அனுப்பப் பெற்றது.)

உ. செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுணர்ந் தடங்கியவரும், தமிழ்மொழிவளர்த்தலே தம் கடனாக் கொண்டவரும், நன்னெறியொழுகிய இன்னிசைச் செல்வரும், இச்சங்கம் தோன்றிய நாள் தொட்டு இதனைப் பேணிப் புரந்தாருமாகிய அரித்துவாரமங்கலம், திருவாளர் வாசுதேவ கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள் உடலொழித்து, இறைவனடி சேர்ந்தமை, பொதுவில் இத்தமிழ் நாட்டிற்கும், சிறப்பில் இச்சங்கத்திற்கும் பெருங்குறையேயாகும். அவர்கள் இப்பொழுது புறக்கண்களுக்குப் புலனாகாது போயினராயினும், அவர்களது அன்பு உள் நின்று தமிழர்களை யெல்லாம் ஆட்டிவைக்குமென்றே இப்பெருங்கூட்டத்தார் நம்புகிறார்கள். அவர்களது திருவுருவை என்ஞான்றுங் கண்டு மனவெழுச்சி பெறும்பொருட்டு, அன்னோர் திருவுருவப்படம் பெரியதொன்று சங்கத்தில் அமைத்துக்கோடல் வேண்டுமென்று யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இது திருவாளர் இராசாளியார் அவர்கள் மனைவியார் அவர்கட்கும், குடும்பத்தாருக்கும் அனுப்பப்பெற்றது.)

ங. தமிழ்த் தாயின் உண்மைத் திருமகாருள் ஒருவராய்த்தோன்றி, உண்மைத் தொண்டுகள் பலவாற்றி, மேனாட்டாரும் தமிழருமை உணரச்செய்த மதுரைத் திருவாளர் ஜே. எம். நல்லசாமி பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்., இறைவன் திருவடி எய்தியமை குறித்து இப்பெருங் கூட்டத்தார் பெருந்துயரடைகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இது, திருவாளர் பிள்ளையவர்கள் மகனார் திரு. ந. இராமநாத பிள்ளையவர்கட்கு அனுப்பப்பெற்றது.)

ச. எவ்வளனும் இனிது வாய்ந்துள்ள தமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழி வரிசையிற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பல முறையும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாய பாடமாக ஏற்படுத்தாமலும்

இருப்பது பிசகென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரிகளில் கலைபயில் கருவி மொழியாகவும் கொண்டு தங்கள் முதற் கடமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் வி. ஏ. சகராயப்பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர் ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள், பி. ஏ.

௫. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியின் நலத்தையும், உரிமையையும் பேணுவதற்காகத் திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களை, பி.இ., எம்.சி.ஐ., மேற்கழகத்தின் உறுப்பினராக்க வேண்டுமென்று பலமுறையும் தமிழர்கள் பலராலும் கேட்டுக்கொள்ளப் பட்டும், இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாராலும் சென்ற ஆண்டுத் திரு விழாக்காலத்தும் பின்னரும் இன்னும் மற்றச் சங்கங்களாலும் வற்புறுத் தப்பட்டும், இன்னும் கவனியாதிருத்தல் சரியல்லவென்று காட்டி, இனியேனுங் காலந்தாழ்க்காது, உண்மைத் தமிழ்த் தொண்டு புரியும் திருவாளர் நாயக்கர் அவர்களைப் பல்கலைக் கழக உறுப்பினராக்க வேண்டுமென்று அக்கழகத் தலைவர் அவர்களையும், சென்னை ஆட்சியாளரையும் மீண்டும் இப்பெருங் கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் பண்டிதர் எல். உலகநாத பிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர் அ. சாமிராவ் அவர்கள், பி.ஏ.,

(இம்முடிபுகள் மாட்சிமிக்க சென்னை ஆட்சியாளருக்கும், அரசியலாருக்கும், பல்கலைக்கழகத்தினருக்கும் விளக்கவுரைக் குறிப்போடு அனுப்பப்பெற்றன.)

௬. பொதுப்பெயர்களையும், சிறப்புப்பெயர்களையும், பிறசொற்களையும், அரசாட்சியாரும், இருப்புப் பாதைக்காரரும், பிறரும் தம் மனம் போனவாறெல்லாம் எழுதிவரல் தமிழியல்புக்கு முற்றிலும் மாறுபடுவதுடன், மொழியின் சிறப்பு நிலைக்கு இடுக்கண் விளைப்பதும், அவ்வச் சொற்களது வரலாறு மறைந்தொழியப் பொருட்டாவதுமா யிருத்தலால், இனிமேல் ஒழுங்காக எழுதும் படிக்கும், தாமே ஒழுங்காக எழுத முடியாவிட்டால் தமிழ்ப்புலவர்களையாவது, தமிழ்ச் சங்கங்களையாவது கேட்டறிந்தெழுதும் படிக்கும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் எம். எஸ். கலியாணசுந்தரமையர் அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர் என். சீதாராமபிள்ளை அவர்கள்.

(இம்முடிபு, அரசாட்சியினருக்கும், இருப்புப்பாதை யாளருக்கும், இம்முடிபுப் பொருளொடு தொடர்புடைய ஏனைப் பலருக்கும் தனித்தனி விளக்கவுரை, எடுத்துக்காட்டு முதலிய வற்றுடன் அனுப்பப்பெற்றது. தென்னிந்திய இருப்புப்பாதைத் தலைவர் அவர்கள் இதுபற்றி வேண்டுழியெல்லாம் சங்கத்தினைக் கலந்துகொள்ளுவோம் என விடை எழுதியுள்ளார்கள்.)

எ. இலக்கணமுறை பிறழ்ந்தும், பிறமொழிப் பெயர்களைத் தமிழியல்புக் கேற்பத் திருத்தாமலும் உரைநூல்கள் எழுதுவதும், அந்நூல்களைப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் பாடமாக வைப்பதும், தமிழ் மொழிக்கும், அதனைக் கற்போருக்கும் பேரிடர் விளைக்குமாதலால், பணம் ஒன்றையே கருதி அவ்வாறு எழுதா வண்ணம் புலவர்களையும், அத்தகைய நூல்களை ஒப்புக்கொள்ளாதபடிக்கும், ஒப்புக்கொண்டுள்ளவற்றிலுள்ள குறைகளை உடனே மாற்றும்படிக்கும் சென்னைப்பல்கலைக் கழகத்தாரையும், பொதுக்கல்வித் தலைவர் அவர்களையும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் அ. சாமிநாதபிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர் அ. பாலகிருட்டின பிள்ளை அவர்கள், பி.ஏ.

(இம்முடிபு, சென்னை அரசியலாருக்கும், பல்கலைக் கழகத்தாருக்கும், பொதுக்கல்வித்தலைவருக்கும், தமிழ்க் கல்விப் பாட அமைப்புக் கழகத்தலைவருக்கும் வேண்டுகோளுடன் அனுப்பப் பெற்றது. இதுபற்றிப் பொதுக் கல்வித் தலைவர் அவர்களும், பாட அமைப்புக் கழகத்தலைவர் அவர்களும் பிழைகள் உள்ளனவற்றை எடுத்துக்காட்ட வேண்டினர். அது குறித்துப் பலதலையாக ஆராய்ந்து தொகுத்து வருவனவற்றை முடித்து விரைவில் அனுப்ப எண்ணியுளோம்.)

அ. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்க் கணக்காயர்களா யுள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம், பிறகணக்காயர்களது ஊதியத்தோடு ஒப்ப நோக்குமிடத்து, மிகவும் குறைந்ததாயிருக்கின்றது. உழைப்பினாலும், அறிவினாலும் மற்றைய கணக்காயர்களுக்

குத் தமிழ்க்கணக்காயர்கள் ஒருவகையிலும் தாழ்ந்தவர்களா யில்லாதிருந்தும், அவர் ஊதியம் மட்டும் குறைவாயிருப்பது, தமிழ் மொழியையும், அதனைக் கற்போரையும் மதியாமையும், தளரப்பண்ணுவதுமா மாகையால், இனிமேல் மற்றைய கணக்காயர்களுக் கொப்பத் தமிழ்க்கணக்காயர்களுக்கும் தக்கபடி ஊதிய முறை ஏற்படுத்த வேண்டுமென்று இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர் வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள்.

(இம்முடிபு சென்னை அரசியலாருக்கும், சென்னைப்பல்கலைக் கழகத் தலைவருக்கும், பொதுக்கல்வித் தலைவருக்கும், எல்லாக் கல்லூரி, உயர்தரப் பள்ளிக்கூடங்களின் தலைவர்கட்கும், நடத்துவோர்கட்கும், நாட்டாண்மை, நகராண்மைக் கழகங்களின் தலைவர்கட்கும் அனுப்பியுள்ளோம். இதுபற்றிக் கோயமுத்தூர் இஸ்டேன்ஸ் ஐரோப்பிய உயர்தரப் பள்ளிக்கூடத் தலைவர் முதலிய சிலர், கணக்காயர்களைச் சேர்க்கும்போதும், அவர்கட்கு ஊதியம் ஏற்படுத்தும்போதும் எம்மொடு சூழ்ந்துசெய்யத் தலைப்பட்டிருக்கின்றனர்.)

கூ. உண்மையான தமிழ்த்தொண்டுகள் பல செய்துவரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூற்றுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு, அச்சங்கத்தை நன்னிலையி லுய்ப்பதற்காகத் தத்தமாலியன்ற உதவி செய்யும்படி தமிழர், தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இது மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் அவர்கட்கும், அமைச்சர் அவர்கட்கும், செந்தமிழ்த்தாள் ஆசிரியர் அவர்கட்கும் அனுப்பப்பெற்றது.)

ώ. தமிழகத்திலுள்ள பெருமடங்களின் தலைவர்கள் தங்கள் பொருட்பெருக்கின் ஒரு சிறு பகுதியையேனும் தங்கள் கடமையாகிய தமிழ் மொழி வளர்ச்சியில் செலவிடுவோர்களாயின் பெரும் பயன் விளையுமென்று அன்னோர்களைப் பன்முறை கேட்டும் அவர்கள் வாளா விருத்தல் மிகவும் கவலத் தக்கதாயிருக்கிறது. இனியாவது அவர்கள் தங்கள் கடமையை யோர்ந்து தமிழ் மொழி மேம்பாட்டுக்கு ஆவன செய்யும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இது திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் மடங்களின் உயர்திருவாளர்களாம் பெருந்தலைவர்கள் திருநோக்கிற் கனுப்பப்பட்டது.)

௰௧. பிறமொழி நூல்களையும், கலைகளையும் தமிழ் மொழியிலாக்கிக் கொள்ளுவதற்காக வேண்டிய சொற்களைத் தேடவும், ஆக்கவும் தக்க புலமை வாய்ந்த தமிழறிஞர்கள் கூடிய ஒரு கழகம் கூட்டும் படிக்குத் தமிழ்ச் சங்கங்களையும், தமிழறிஞர்களையும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

(இது குறித்து வேண்டும் முயற்சிகளிற் றலையிட்டுளோம்.)

---

## அதன்பின்னர் நிகழ்ந்த சொற்பொழிவுகள்.

**திருவள்ளுவர்**—திரு. டி. எல். திருஞானசம்பந்த முதலியார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், பட்டுக்கோட்டை.

**சோமான் பெருமாள்**—திரு. பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், திருச்சிராப்பள்ளி.

**பண்டைத் தமிழர் இல்லறம்**—திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள், எம்.ஏ., பி.எல்.

## உறுப்பினர்.

பத்தாம் ஆண்டின் தொடக்கத்தே நம்சங்கத்தில், உ௱௰அ உறுப்பினர் இருந்தனர். இவ்வாண்டில் சேர்ந்தார் ஐம்பத்துமூவர். விலகிக்கொண்டவர் இருபத்தொருவர். உலகவாழ்வினை நீத்தார் ஒருவர். எனவே, இதுபோது சங்க உறுப்பினராகவுள்ளவர் இருநூற்று நாற்பத்தெழுவர் (சேர்க்கை ௪). இவ்வாண்டில் ஈபோவிலிருந்து திரு. கோ. தியாகராசப் பிள்ளை, அவர்கள் (ஜி. எம். வி. சி.) ஆயுட்கால உறுப்பினராகச் சேர்ந்தார்கள். நம் சங்கம் நடைபெறும் இத்தஞ்சை மாநகரத்துள்ள தமிழ்க்குடித் தலைவர்கள் தாமே நாலாயிரவருக்கு மேலாயிரவராகவும், இத்தஞ்சையிலும், திருச்சிராப்பள்ளி முதலிய புறநகரங்களிலும், இன்னும் இத்தமிழ் நாட்டிலும், வேறிடங்களிலும் உள்ளாருள் ஒரு காலாயிரவரே இப்பத்தாம் ஆண்டில் நம் சங்கத்தின் உறுப்பினராவர் என ஈண்டுக் குறித்தற்கு நாணுதலுடையேம். எனினும், நம் சங்க உறுப்பினர்கள் தங்கள் தங்கள் அன்பர்கட்கும் தாய்மொழிபேணும் கடமையைப் புகட்டி அன்னார்தம் கூட்டுறவுங்கொள்ளும் முயற்சியுடையாராக, நம் சங்க உறுப்பினர் வளர்மதியனைய ராவரென்பது ஒருதலை.

### கூட்டங்கள்.

இவ்வாண்டில் உறுப்பினர் தொழிற் சூழ்ச்சிக்கூட்டம் இரண்டும், நிறைவேற்று கழகத்தார் கூட்டம் பதினைந்தும், பொதுக் கூட்டங்கள் பதினாறும் நிகழ்ந்தன. பொதுக்கூட்டங்களின் விவரம் மூன்றாவது சேர்க்கையிற் காண்க.

### நூல் நிலையம்.

இவ்வாண்டின் தொடக்கத்தே இந்நிலையத்தில் ௲௩௬ சுவடிகள் இருந்தன. இவ்வாண்டில் சங்கத்தில் விலைக்கு வாங்கியனவும், சங்கத்திற்கு வந்த தாள்களைத் தொகுத்தனவுமாகச் சேர்ந்தன ௨௰. அன்பர்களாற் சங்கத்திற்கு நன்கொடையளிக்கப்பெற்றன ௭௫. (சேர்க்கை ௨) ஆகவே, இப்போது நூல்நிலையத் திருப்பன ௲௱௩௧ சுவடிகள். மேற்குறித்தபடி நூல்கள் உதவிய அன்பர்க்கெல்லாம் எம் நன்றி யுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இந் நூல்நிலையத்தே இவ்வாண்டில் சுவடிகள் எடுத்துப் படித்தவர்கள் ஐந்நூற்றின் மிக்காராவர்.

இந் நூல்நிலையத் திருக்கும் சுவடிகளிற் பெரும்பாலன அன்பர்களால் உதவப்பெற்றனவே. ஆங்காங்குத் தங்கிப் பயன் பெரிதின்றிக் கழியும் சின்னீர், ஒருங்கு கூடக்கூட அருவியாகி, யாறாகிப் பல்லோர்க்குப் பல்வழியிற் பயன்படுத லொப்பத், தத்தம் முன்னோர்களாலும் தம்மாலும் பயிலப்பெற்று அமைதியுற்றிருக்கும் நூல்களை அன்பர்கள் இந் நூல்நிலையத்திற்கு உதவி வருவதனாற் போதரும் பயன் அளவிடற் குரியதொன்றன்றாகு மன்றே! அன்பர்காள்! செந்தமிழ் மகட்குப் பொன்னினும் பொருளினுங் காட்டிற் சீரிய பேருதவி நூற்கலைகளே யாகுமன்றே!!

### செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி.

சென்ற நான்கு ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இக்கல்லூரி இதுபோது ௬௫ மாணவர்களையும், மூவர் ஆசிரியர்களையும் கொண்டு நிகழ்ந்து வருகின்றது. செந்தமிழ்ப் பயிற்சியை முதன்மையாகக் கொண்டு அதனோடு ஆங்கிலம், கணிதம் முதலியவற்றையும் போதிய அளவு பயிற்றி வரும் இக்கல்லூரி வரவர வளர்ந்து வருகின்றது. இன்னும் பொருள் நிலை வளரவளர இதன் முழுநோக்கமாகிய கைத்தொழிற் கல்வி, மேனாட்டுக் கலைகளைத் தாய்மொழி வழியாகப் பயிற்றல் முதலியவும் தொடங்கப்பெறும்.

இக்கல்லூரியின் சிறந்த நோக்கத்தினையும், இதனால் விளைந்து வரும் நன்மையினையும் நகர மாந்தர் நன்கு அறிந்திலர் எனவே குறித்தல் வேண்டும். அறக்கல்விச்சாலை என்ற அளவில், அதன் தகுதியைச் சிறி

தும் ஆராயாது குறைத்துப் பேசி நெகிழ்ந்துபோகும் உலக வழக்கம் வரவரக்குறைந்து வருதலின், இனி நம் நகர மாந்தர் ஆகிய செல்வரும் பிறரும், இப்பள்ளியின் தகுதியினைக் கண்டாதல், கேட்டாதல் அறிந்து, இதன் கண் தங்கள் தங்கள் மக்களைக் கல்வி பயின்று வரச்செய்து ஊக்குவார்கள் என்னும் எண்ணம் உடையேம்.

இக்கல்லூரிக்கு நம் சங்கத்தலைவர் அளித்துவரும் திங்கள் இருபத்தைந்து ரூபாவும், கல்வியிலாக்காதார் ஆண்டிற்காண்டு அளித்து வரும் பற்றுப் பொருளும், கரந்தை வணிகரது நாளுக்குநாள் சுருங்கித் தேய்ந்த உண்டிகை யுதவியுமே வருவாயாகும். நம் தலைவர் அவர்களைப் போன்று உண்மைக் கல்வி யன்பினர் பலர் முன்வந்து புரந்தருள்வாராக.

இக்கல்லூரிக்கு இப்பொழுது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள், இச்சங்க வுறுப்பினரும், சிறந்த புலவருமாகிய திருவாளர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை அவர்கள். இவர்கள் கோனூர்ப்பட்டுக் கற்பகவிநாயக கலாசாலையில் தலைமை ஆசிரியராக அமர்ந்து; அங்குள்ள மாணவர்களை மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்ச்சிக்குத் தகுதியுடையராக்கி, தமது கல்வியாலும், ஒழுக்கத்தாலும், உழைப்பாலும் அங்குள்ளாரனைவரும் விரும்பிப் போற்றும்படி யிருந்தார்கள். அத்தகையார், அங்கே தமக்குக் கிடைத்த அதிக வருவாயை விடுத்தும், வேறுபல்லிடங்களில் பெருவருவாய் அளிப்பதாகப் பிறர் அழைத்தமைக்கு இணங்காதும், இங்குவந்து ஆசிரியராக இருக்க இணங்கியதற்குப் பொருட்டு, இவர்கட்கு இச்சங்கத்தின்கண் இயல்பாகவுள்ள அன்பேயாகும். இவர்கள் இங்கு வந்தபின்னரே இக்கல்லூரியின் நோக்கங்களில் ஒரு பகுதி நன்கு நிறைவேறி வருகிறது குறிப்பிடத்தக்கது. அதாவது மாணவர்கள் தமிழிலே திருத்தமான பயிற்சி பெற்று வருகின்றனர் என்பதே. மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்ச்சிக்கும் சிலர் பயின்று வருகின்றனர். இவ்வாற்றால் இத்தமிழ்ச் சங்கமே யன்றிப் பிள்ளைகளின் பெற்றோர்களும் இவர்கட்குப் பெரிதும் கடமைப்பட்டிருத்தலை யாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்க்குத் துணையாகி ஒத்துழைக்கும் மற்றைய ஆசிரியருக்கும், இக்கல்லூரியைச் செவ்வையாகக் கண்காணித்துவரும் திரு. எம். எஸ். கலியாணசுந்தரமையர் அவர்களுக்கும் யாம் மிகுதியுங் கடமைப்பட்டிருக்கின்றோம். அன்றியும், இக்கல்லூரியில் உயர்தரத் தமிழ்க் கல்வி பயின்றுவரும் மாணவர் சிலர்க்கு உண்டி முதலிய உதவி வரும் திரு. பால்சுவாமிகள் மடத்தின் தலைவர் திரு. கிருட்டினசாமி அடிகள் அவர்களுக்கும் எம் நன்றி யுணர்வினை வெளியிட்டுத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## இலவசப்படிப்பிடம்.

இச்சங்கத்தைச் சார்ந்து யாவர்க்கும் இனிது பயன்பட்டுவரும் இப் படிப்பிடத்திற்கு இதுபோது, க. சுதேசமித்திரன், உ. திராவிடன், ௩. ஞானசாகரம், ௪. நல்லாசிரியன், ௫. Madras Mail என்றதாள்கள் வரவழைக்கப் பெறுகின்றன. இவற்றொடு நம் தலைவர் அவர்களால் ௬. Justice, ௭. சித்தாந்தம், ௮. தமிழர் நேசன், ௯. செந்தமிழ் என்னும் தாள்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் ௰. செந்தமிழும் நன்கொடையாக அளிக்கப் பெறுகின்றன.

தஞ்சைநகராண்மைக்கழகத்தார் ஆண்டுதொறும் நூறுரூபா அன்புடன் உதவி இப்படிப்பிடத்தை விரும்பிப் போற்றி வருகின்றனர். யாமும் இவ்வுதவியைப் பெரிதும் விரும்பிப் பாராட்டுகின்றேம்.

### வருவாய்.

நம்சங்க உறுப்பினரும், சங்கத்தே அன்புடைய பிறரும், அவ்வப்போது அளித்துவரும் வரி, நன்கொடைகளே இதுபோது நம்சங்கத்துப் பொருள்வருவா யாகும். இவைகள் நம்சங்க நோக்கங்களெல்லாம் முற்றுதற்கு யாம் மேற்கொண்ட பலதுறைகளையும் தாங்கி நடாத்தற்குப் போதியனவாக வில்லை. எனினும், இறைவன் திருவருள் இத்தகைய வருவாயை ஆண்டிற்காண்டு விரித்து வருவதுகண்டு, யாம் தொடங்கிய துறைகளைச் சுருக்காது போற்றி வருவதுடன், தொடங்க வேண்டுவன வற்றையும் ஒல்லையிற் றொடங்கத் துணிந்துளேம்.

சென்ற ஆண்டறிக்கையிலேயே பெருஞ்செல்வம் வாய்ந்த பெருமக்கள் தாம் பொருள்பெற்ற பயனை யடையவேண்டுமென வேண்டியுள்ளேம். இவ்வாண்டிலும் அவ்வேண்டுகோளையே வலித்தல் உடையேம். இவ்வேண்டுகோள் செல்வர்தம் செவிகளிற் சென்று சேர்வதாக!

இவ்வாண்டில், தமிழ்த்தாயின் தலைச்சேயனைய ஒரு பெருஞ்செல்வர் இச்சங்கத்தின் தமிழ்த்தொண்டினைக் கேட்டறிந்து, தாமாகவே முன்வந்து, சங்கத்தின் பெருந்தொண்டினிற்கேற்ற பொருள் வருவாய் இல்லாமைக் கிரங்கி, உள்ளக்கனிவோடு சங்கக்கட்டிடச் செலவிற்கு ஓராயிரூபாவும், கல்லூரியிற் கல்விபயின்று வரும் மாணவர் ஒருவருக்கு ஐம்பது ரூபாவும் உதவி, மேலும் இயன்றவளவு உதவி வருவதாகவும் சொற்பெறருளினர். இன்னும் இப்பெருந்தகை நம் சங்கத்துக் காப்பாளராக அமைந்து புரந்துவரவும் நேர்ந்திருக்கின்றனர். இத்தகையார் விருப்பின்படி இவர் தம் ஊர், பெயரினை ஈண்டு வெளிப்படுத்தற்கு மில்லேம்; இவர்களைப் புகழ்ந்து உரைத்தற்கு மில்லேம்.

இங்ஙனமே, பெருங்கனிவோடு பெரும்பொருள் உதவிவரும் மற்றோர் செல்வப்பெருந்தகையாராகிய நம் தலைவர் அவர்கள் கல்லூரிக்குப்

பொருளுதவி, நூல்நிலையத்திற்கு நூல்கள்வாங்கி அளித்தல் முதலிய பெருங் கொடைகளைப் புரிந்து வருகின்றனர். நம் சங்கத்துத் தலைவர் என்ற உரிமையானே இவர்களையும் நம் வாயாரப் புகழ்ந்து உரைத்தற் கில்லேம்.

இன்னும், இத்தென்னாட்டு அறப்பெருங்குடியாய நாட்டுக்கோட்டை வணிகமரபினைச் சிறப்பிப்பாரும், நமது காப்பாளருள் ஒருவரும், பெருங் கொடைப் பெருஞ் செல்வருமாகிய திருவாளர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச்செட்டியாரவர்கள், எம். ஆர். ஏ. எஸ், வழக்கம்போல் ஆண்டுவிழாச் செலவிற்கு நூறுரூபா அனுப்பியதோடு, சங்கக் கட்டிடத்திற்கு வேண்டும் இடம் முதலிய திட்டங்களைச் செய்து கொண்டு அறிவிக்குமாறுங் கூறியுளர்.

அங்ஙனமே, அந்த அறப்பெருங் குழுவிற்றோன்றிய பெருந்திருவினர் திவான் பகதூர் சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் ஆண்டு வரியாக நூறு ரூபா அனுப்பியருளினர். இந்நகர்த் திருவாளர் எஸ். எல். முத்துச்சாமி உடையார் அவர்கள் ஆண்டுவிழாச் செலவிற்கென ஐம்பது ரூபா உதவினர். இன்னும், நம் சங்கத்திற்குத் தத்தம் இல்லங்களில் நிகழ்ந்த நலநேர்ச்சிகள் பற்றி நன்கொடை யளித்த ஏனைப் பெருந் தகைகளின் குறிப்பு:

திருவாளர் கே. கோபாலையரவர்கள், திரிசிரபுரம்,
உத்தியோகம் உயர்ந்ததற்கு ரூ. க
,, க. அண்ணாமலைப் பிள்ளை அவர்கள்,
ஆலங்குடி, தலைமகன் ஆண்டு நிறைவு ,, க
,, எல். எஸ். மாணிக்கம் பிள்ளை அவர்கள்,
கீழைவாயில், மகன் மணம் ,, ௰
,, சாமிக்குச்சராயர் அவர்கள், குருங்களூர், மணம் ,, ௫
,, வி.பி. வைத்தியலிங்கத்தேவர் அவர்கள், மகள்மணம் ,, ௫
,, 'தனிடமிழ்த்தொண்டன்', தந்தையார் பிற்கடன் ,, ௰௫
,, ஆர். சிவகடாட்சம் பிள்ளை அவர்கள்,
இடைக்கியம், தந்தையார் நாள் ,, உ

செந்தமிழ்த் தாய்க்கு ஈடுபட்டு விளங்கும் எம் தலைவர் தாயன்பினைக்கண்டு கவரப்பெற்ற அவர்தம் தம்பியார் சிறுமி பங்கயவல்லித் திரு தான்சேமித்து வைத்திருந்த தொகையினை மனங்கனிந்து தமிழ்த் தொண்டிற்கு ஆக்கிய செய்தியை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கின்றேம். அறியாப் பெண்களும் ஈடுபடும் சிறப்புடையது நம் தமிழ் மொழியெஃ

ருல், பெரியார் என்னும் புகழுடையோர் மேல்நோக்காய் இருப்ப தென்னே?

## மகிழ்ச்சி.

இவ்வாண்டில் நம் சங்கத்தின் உறுப்பினருள், திருவாளர் டி. சி. தங்கவேற் பிள்ளை யவர்கள், பி.ஏ., (பாரிஸ்டர்) திருச்சிராப்பள்ளி, சென்னை முறைவிதி மன்ற உறுப்பினராகவும்; திருவாளர் கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், எம்.ஏ., எம். எல்., சென்னை, காளிசுட்டப் பல்கலைக் கழகத்தில் தாகூர் சட்டச் சொற்பொழிவாளராகவும்; திருவாளர் டி. என். சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், திருச்சிராப்பள்ளி. தென்னிந்தியா இருப்புப்பாதையாளரின் உதவி யமைச்சராகவும்; எம் மன்பருள், திருவாளர் டி. சி. சீநிவாசஐயங்கா ரவர்கள், பி.ஏ., பி.எல்., மதுரை. மாட்சிமிக்க பா. இராசராசேசுவர சேதுபதி யவர்கள், இராமநாதபுரம், திருவாளர் டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., கோயமுத்தூர், திருவாளர் எஸ். அற்புதசாமி உடையார் அவர்கள், பி.ஏ., எல்.டி., திருச்சிராப்பள்ளி, முதலியோர் சென்னைமுறை விதிமன்ற உறுப்பினராகவும்; திருவாளர் திவான்பகதூர் சா. ராம. மு. அ. அண்ணாமலைச்செட்டியார் அவர்கள், அரசியற்கழக உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்துக்கொளப் பெற்றமைக்கு யாம்பெரிதும் மகிழ்கின்றேம். இங்ஙனமே அவர்களும், ஏனைச்சங்க உறுப்பினர்களும், அன்பர்களும் நாளும் நாளும் உயர்ந்தோங்கிச் சிறப்புறுமாறு செந்தமிழ்த் தெய்வம் திருவருள் சுரக்குமாக! இவர்கள் நம் தாய்மொழித்தொண்டில் தலைநின்று, உற்றுழி உதவிபுரிந்து, தத்தம் கடனை நிறுவுவார்களாக!

## துயரம்.

இவ்வாண்டில் நம் சங்கம் நிறுவிய துங்கக் குணமலையைப் பற்றுக் கோடாகக் கொண்ட திரு. சண்பகவல்லியம்மையார் பற்றற்று உலக வாழ்வினை நீத்தார்கள். அந்தோ! நம் சங்கம் தன் ஒற்றைப் பெண்மணியினை யிழந்தது. இம்மட்டோ நம்துயர்! தமிழ்ப் பெருங் கிழவரும் நம் சங்கத்தே பேரன்புடையாருமாகிய திருவாளர் சிங்காரவேல் முதலியார் என்னும் பெரியாரும் இவ்வாண்டில் உலக வாழ்வினை நீத்தனர்! இவர்கள் நம் சங்க வளர்ச்சியிற் கொண்டுள்ள ஊக்கமும், அதுபற்றி அன்பர்களை இடையறாது தூண்டி வந்த உதவியும் என்றும் பாராட்டிப் போற்றற்குரியன.

## திரிசிரபுரம் கிளை.

சங்கத்தில் நடைபெறும் தொழில்கட் கெல்லாம் கருவி ஆவாரும், அங்ஙனம் ஆதலை யாரும் அறியாதபடி நடந்துகொள்ளும் திறனுடையாரு

மாகிய ஒருவரைப் போன்ற பல அன்பர்கள் இடையறாது உழைத்துவரும் பேற்றினை வாய்ந்த இக்கிளை, ஏனை மரங்களின் கிளைகளைப் போன்று முதலுக்குப் பாரமாகாது, விழுதூன்றித் தன்னையும் முதலையும் பேணும் ஆலின் கிளையினைப் போன்று, மேலும் மேலும் தளிர்ந்து, ஒளிர்ந்து, மிளிர்ந்து நிலவுகின்றது. இதன் நலன்களை அடுத்துங் காணும் கிளையறிக்கையிற் காண்க. (சேர்க்கை க)

## வெளியீடு.

இவ்வாண்டில், திருச்சிராப்பள்ளி, பண்டிதர் ந. மு வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதி யுதவிய 'கபிலர்' என்னும் ஆராய்ச்சி நூல் அச்சாகி வருகின்றது. 'தமிழ்ப் பொழில்' என்னும் திங்கட்டாள், போதிய அளவு புரப்போர் சேராமையின் இடையீடுறுகின்றது. இவை கூடிய விரைவில் வெளிவரும். இதுகாறும் 'தமிழ்ப்பொழி'ற்குப் பங்குத் தொகை யுதவியார்:

திருவாளர் த. பொ. கை. அழகர்சாமிப் பிள்ளை அவர்கள்,
பி.ஏ., கும்பகோணம். (முற்பகுதி) ரூ. ம

,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,
பி.ஏ., பி.எல்., ,, உரு

,, வே. இராமசாமி வன்னியர் அவர்கள், கூடலூர். ,, உரு

,, வேணுகோபால நாயுடு அவர்கள்,
பட்டுக்கோட்டை. (முற்பகுதி) ,, ரு

,, உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள்,
திருச்சிராப்பள்ளி. ,, உரு

,, நா. துரைசாமி பிள்ளை அவர்கள், ஷை (முற்பகுதி) ,, ரு

,, ஆர். சாமிநாதையர் அவர்கள், கும்பகோணம்.
ஓராண்டு வரி ,, ௬

## நன்றி கூறல்.

நம் சங்கத்தின் பெருங்கொடைப் புரவலரும், பீடுசால் புலவர் தம் பாடல்சால் பெருந் தகையும், அறப்பெருஞ் செல்வரும் ஆகிய ஆண்டிப்பட்டியின் தலைவர், திருவாளர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச் செட்டியாரவர்கள், எம். ஆர். ஏ. எஸ்.; அங்ஙனமே நம் சங்கத்து அரும் பெருங்கொடைப் புரவலரும், உண்மைத் தமிழ்த் தொண்டரும் ஆகிய கீழையூர், திருவாளர் சிவசிதம்பரம் பிள்ளை அவர்கள்; நம் சங்கத்திற்குப் பேருதவி புரிந்து, பெருந்துணையாகும் திருவாளர் திவான் பகதூர் சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்; நம் சங்கத்திற்கு இடம் பொருள் ஏவலெல்லாம் வேண்டுழிவேண்டுழி யுதவும் திருவாளர் பூண்டி

வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கள்; எஸ். எல். முத்துச்சாமி ஆடையார் அவர்கள்; சங்கக் கட்டிடம் உதவிய திருவாளர் கோவிந்த ராசலு நாயுடவர்கள் முதலிய திருவினர்கட்கெல்லாம் நமது என்றும் மறவா நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனமே, தமது பொருள், பொழுது முதலிய எல்லாம் தமிழ்த் தாய்க்கே உரிமையாக்கி, உண்மைத் தமிழ்த் தொண்டியற்றிவரும் நம் அருமைத் தலைவர் அவர்கள், திரு. ஐ. குமாரசாமி பிள்ளையவர்கள், பி.ஏ., திரு. க. சண்முகம் பிள்ளையவர்கள், பி.ஏ., திரு. த. பீ. சோம நாத ராவ் அவர்கள், திரு. சி. தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையவர்கள், திரு. ஆ. ச. ஆறுமுகம் பிள்ளையவர்கள், திரு. எம். எஸ். கலியாணசுந்தரமையர் அவர்கள், திரு. ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்கள், பாரிஸ்டர், திரு. டி. என். குருமூர்த்திப் பிள்ளையவர்கள், திரு. இராமசாமி வன்னியர் அவர்கள், இருவகைச் செல்வமும் ஒருவழியுற்று உள்ளும் புறமும் தமிழ் மணங்கமழுஞ் சீரியரும், திரிசிரபுரத் தமிழ்ப் பேராசிரியரும், சங்க உறுப்பினர்கட்குச் சொற்பொழிவு முதலியவற்றால் இடையறாப் பேரின்ப மியற்றி வருவோருமாகிய திருவாளர் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், ஒன்பதாம் ஆண்டுத் திருவிழாவில் தலைமை தாங்கிய திருவாளர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள், எம்.ஏ., பி.எல்.; அவ்விழாவிலும், பொதுக் கூட்டங்களிலும் தலைமை தாங்கியும், சொற்பொழி வியற்றியும் தமிழ்த் தாயின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துச் சங்கத்தன்பர்களை ஊக்கிய ஏனைத் தமிழ்ப் புலவர்கள் முதலாயினோர்க்குச் சங்கத்தின் கடமையாய நன்றியறிவினைத் தெரிவிக்கின்றோம்.

---

## வேண்டுகோள்.

'வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னாலுரை கால மிரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.'

பெருந்தமிழ் மக்காள்!

ஒரு நாட்டின் மக்களது நிலையை யறிவிப்பதற்கு ஒரு நிலையறி கருவியை ஒத்திருப்பது அவரது மொழியே. அது அவரது பண்டைய நிலையைக் காட்டுவதோடு, இப்போதைய நிலையையும், இனி வருநிலையையும் குறிப்பிக்கும். தன்னை யாளுதலுடைய மக்களது வாழ்க்கையினுட்

புகுந்து, அவரைப் பலவிதத்தும் இயக்குந் தன்மையுடையது. அவர் தன்னைப்போற்றின் அவருக்கு முதன்மை யளித்தலும், தன்னை மதியாதிருப்பின் மாற்றார் ஆளுகைக் குள்ளாக்கித் துன்புறுத்தலும் ஆய ஆற்றலுடையது.

இதற்குச் சான்றாக, மேனாட்டு மொழிகளை நோக்கின், அவ்விடத்து இப்போது வழங்கும் எல்லா மொழிகட்கும், 'கிரேக்', 'இலத்தீன்' ஆகிய இரு பண்டைய மொழிகளே அடிப்படையாக விருக்கின்றன. அவையிரண்டும் வழக்கினின்று ஒழிந்திருப்பினும், வெவ்வேறுருக்கொண்டு தற்காலத்திய இணையிலா நாகரீகத்திற்கு அறிகுறியாயிருக்கின்றன.

அவற்றையொப்ப, நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி, நமது வாழ்க்கையை வழிப்படுத்தி நிற்கும் மொழிகள் பல. அவற்றினுள் முதன்மையானது தமிழ். இதன் தோன்றற்காலம் இன்னது என்று கற்பிப்பது கூடாதது. மற்றை மொழிகளைத் தனது துணைவேண்டாவென்றியால் அடிமைகொண்டு, தன்னையொத்த சிறந்த மொழிகள் பலவற்றிற்குத் தான் தாயாகி, வேற்று மொழிகள் சிதைந்தொழிந்த காலத்தும் தான் தன் பண்டைய இளமை மாறாது, என்றும் ஒரு படித்தாய்த் திகழ்வதும், தன்னை வழங்கும் மக்கட்கு அவர் தன்னிழலிற் பிறந்தமையினானே உரிமை பல அளித்து உயர்வடையச் செய்வதும் இது. இதன் பண்டைப் பெருமை எல்லையற்றது!

உலகத்துப் பண்டையோர் பேச நாவியக்கமின்றிக் குறிகாட்டித் திரிந்து, வனங்களிலும், குகைகளிலும் விலங்கினத்தோடொப்ப வாழ்ந்த போது, பைய நாவை யசைத்துப், பொருள்கட்குப் பெயர் பொறித்து, வாழ்க்கையின் இனிய சாறுகளை முழுமனதுடன் சுவைக்க இடங்கொடுத்தது நந்தமிழ்! தழையுந் தோலுமே உடுக்கையிற் சிறந்தவையென மற்றையோர் அணிந்தபோது, பாம்புரிவை போன்ற கொட்டைக் கரைய பட்டுடை யுடுத்தது தமிழ்! முற்காலத்துக் கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்த யவனர், புலவர்க்கும், பாணர்க்கும் இலைமுடியளித்தபோது, புனைதேரும், மந்தரம்போன் மாண்ட களிறும், வெள்ளிநாராற் றொடுத்த பொற்றாமரையும் வரையாது வீசியது தமிழ்! பெருமாண்புடையார் அவ்வவர் வாழ்நாட்குப் பின்னும் நிலைபெற்றிருக்கச் செய்யும் விரகு மற்றையோர் அறியாதிருந்தபோது, அவருக்கு உருவச்சிலைநாட்டி வழிகாட்டியது தமிழ்! பொருள் வேண்டின் கொள்ளை கொள்வதே மேனாட்டாரும் மற்றையவரும் தொழிலாக் கொண்ட காலத்துக், கடிய திரை கடலில் சுழியையுங் கொடுங் காற்றையு மஞ்சாது வங்கஞ் செலுத்திப் பொருளிற் பற்றின்றிப் பிறர் மிடியைத் தவிர்க்கவென வாணிகஞ் செய்

தது தமிழ்! இரண்டொரு பயிரேயன்றி வேறு வளர்க்க வறியாது மூர்றையோரிருந்த நாளில், பதினெண் வகைக் கூலங்களினும் மிகும்படி, நிலமகள் பயிர்மயிர் சிலிர்த்துத் தன் மக்கட்குப் பலவளமு மளிக்கச் செய்தது தமிழ்! ஒருசாதிக்கொருநீதியாயிருந்த காலத்தெல்லாம், பக லாணிபோல் நடுநிலைமை குன்றாதிருந்தது தமிழ்! தெய்வதங்கள் பல வாய்க் குன்றும், மலையும், யாறுங், கடலும் மற்றும் இயற்கைப்பொருள்கள் பலவும் கடவுளரே யெனப் பொருட்படுத்தி மயங்கி மற்றையோர் வணங் கியபோது, கந்தழியின் எல்லைகடந்த நுணுக்கத்தை யறிந்து வைத்ததும் நந்தமிழே!

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியை,

> 'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
> யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுண்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
> தன்னே ரிலாத தமிழ்.'

எனப் பண்டையோர் பாராட்டியது முழுவதும் ஒக்குமே யொக்கும்.

முழுமாண்புடைய இம்மொழி முத்தமிழரசரால் அவர் நாளில் தந்தாய்மொழியெனப் போற்றப்பட்டு, அவருக்குப் பின் இந்நாட்டில் நேர்ந்த எண்ணிறந்த மாறுதல்களுக்கஞ்சாது, நெருப்பிலே நின்றும் நீரிலே தவழ்ந்தும் இன்றுவரை நிலைத்திருக்கும் பெருமையை நாம் நன்கறிவோம்.

எனினும், அம்மொழி தற்காலத்து இயற்கையில் அதன் அருமை பெருமைக்குத்தக இருக்கவேண்டிய நிலையில் இருக்கின்றதா? என்று நோக்கின், இல்லையென்பது தெற்றெனப் புலப்படும். ஏனெனின், 'தமிழ் மக்கள் யாம்' என்று சொல்லிக்கொள்வோரே, அவர் மொழியைப் புறக் கணித்துத் தம்மைத்தாமே மதியாது, வேற்று மொழிகளில் ஈடுபட்ட னர். அது பொருட்டாக, வேற்று மொழிகளும் தமிழ் நாட்டில் மிகுந்து, தமிழ் முதனூல்களே வெளிவரா வண்ணந் தகைத்தன. அதனோடு, தனிச் செம்மொழியாகிய தமிழும் பின்பு படிப்படியாக இந்த நாட்டை வென்றோர் மொழிகளை யெல்லாம் ஒருவாறு தழுவிக், கடையாக ஆங்கில மும் கலப்புண்டு, வேற்று மொழிகளின் கிளைமொழியே யென மாற்றார் வாதிக்கவும் நேர்ந்து இப்பொழுது நிற்கின்றது.

தன் மதிப்புடைய நாட்டவரெவரும் விரும்பா நிலையில் நம்தமிழ் நிற்றலைக் கண்டு, அவ்வப்போது அதன் சீருந் திறனும் வெளிவர, நம்மவரிற் சிற்சில பெரியோர் ஆங்காங்குத் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி, எத்துணையோ உழைப்பினும், ஒற்றுமையின்மையாலும், மாற்றார் மயக்கத்தாலும், தமிழ்

மொழி கற்றலாற் பெருவருவாயில்லை யென்ற எக்கத்தாலும், நம்மவர் அம்மொழியின் ஈடேற்றத்தை நாளுக்கு நாள் கைநெகிழ்ப்பவராயிருக் கின்றனர். கலைக்கழகங்களிலும் தமிழ் கற்றற்குரிய மொழியன்று என்னும் மயக்கம் மேற்கொண்டு, தமிழர் பெரும்பாலர் குழுவிய சென்னைப் பேரறிஞர் குழாம் (Senate) அதனை ஒதுக்கி வைத்திருக்கிறது. அது வும் தவிர, தமிழ் மொழியின் வேரையே கெல்லும்படி பல் மொழிக் கலப்புள்ளவையாய்த் தமிழென்ற பெயருடன் வெளிவரும் புதுநூல்கள் பலவற்றையும் பாட அமைப்புக் கழகத்தார் (Text Books Committee) மதித்துக் கலைக் கழகங்கட்கென விதிக்கின்றனர். அவரது சட்டங் களும் சூழ்ச்சிகளும் தமிழ் மக்கள் சிறுவயது முதற்கொண்டு காளைப்பரு வம் வரையும் தமிழின் சுவை நன்கறியாவிதம் இயற்றப்பட்டிருக்கின்றன.

## தமிழ்ச் செல்வர்களே !

தற்காலத்து நமது சிறுர் தமது மழலை மொழிகளால் தொன்று தொட்டுத் தம் முன்னோர் அறிந்த தமிழ் எழுத்துகளைக் கற்பான் புகும் போதே, அவருக்கு 'அ' எனும் எழுத்துத் தமிழ் மொழிக்கே முதலாயது என்பது அறிவிக்கப்படுவதில்லை. மொழிக்கு முதலில் வாராதன எனத் தமிழிலக்கணத்தில் விதித்தவையும், தமிழ் எழுத்தல்லாத வேற்றுமொழி எழுத்துகளுமே முதலில் கற்பிக்கப்படுகின்றன. பின்னும் பண்டே போல் நல்லொழுக்கத்திற்கும் மொழிவளர்ச்சிக்கும் அடிப்படையான தமிழ் நூல்கள் சிறுர்க்கு விதிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு மறை கின்றன. நமது இலக்கியங்களில் சிறுவர்க்குக் கல்வி புகட்டப் 'பாலா சிரியர்' எனக் கணக்காயர் இருந்ததாகத் தெரிகின்றது. அவர் பெரும்புல வராயிருந்திருப்பதும் அறிகின்றோம். பேரறிஞரே சிறுர்க்கு முதன்மை யிற் கல்வியூட்டுவது இன்றியமையாதது என்பது போலும் நம் முன் னோர் கொள்கை. இப்போது அதற்கு முற்றிலும் மாறே! ஒரு வித மாகத் தமிழ் படிக்கவும் எழுதவும் அறிந்து, யாரேனும் அம்மொழியைக் கற்பிக்க வல்லவர் என்ற எண்ணங்கொண்டு போலும், சில கல்லூரி களில் தமிழ் மணம் அறியாதவர் தமிழ்மொழி பெயர்ப்புக்கும், உரை நடைக்கும் ஆசிரியராக அமைக்கப்பட்டிருக்கின்றனர். இதுவும், தமி ழாசிரியருக்குக் கல்லூரிகளில் விதித்திருக்கும் குறைந்த வருவாயும் தமிழ் மொழியிடத்து நம்மவருக்கு இப்பொழுதுள்ள மதிப்பை நன்கு விளக்குகின்றன !

தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களிற் றமிழ் கற்குஞ் சிறுர்தொகை நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு எனின், அது வியப்பன்றே ? முத் தமிழரசரால் இணையிலா மொழியெனப் போற்றப்பட்டுத் தொன்று

தொட்டுத் தனிச்செம்மொழியாய் வழங்கி வந்ததொரு மொழியிடத்து என்ன பிழை கண்டோ சென்னைப் பேரறிஞர் குழாம் அதனை உயர்தனிச் செம்மொழியன்றென்று புறம்பாக்கிற்று! என்றும் இழிபடா மொழிக்கு ஒரு இழிவு மேற்படுத்தினரே! வேற்று நாட்டார் நம்மொழிக்கே முதன்மை கொடுத்தல் வேண்டுமென வற்புறத்தியும், நம்மொழியைக்கொண்டு பிழைக்கும் நம்மவரே வேற்றுமொழிப் பெருமையே பேசி, நமக்குப்பின் நங்கிளை தாங்கும் செல்வர்களாகிய இளைஞரைத் தம் தாய்மொழியை மதியாவிதம் கற்பித்தல் நாட்டுக்கு இன்னலேயன்றி வேறென்ன?

மேன்மக்காள்!

மேற்கூறிய இன்னல்களே யன்றி, மற்றுங் கணக்கற்றன நம் மொழி யீடேற்றத்திற்குத் தடையாய் நிற்கின்றன. அவற்றைப் பொருளாக மதியாது, இனி நாம் ஆற்றவேண்டிய கடமைகளும் கணக்கற்றவையாயிருக்கின்றன. பெரும்பாலும் நாம் நம்மொழியை மற்றைய அயல் நாட்டார் காலத்திற்கேற்ப முன்கொண்டுவந்ததே போற் செய்யவில்லை.

‘பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.’

என்ற உண்மைச் சூத்திரம் ஒன்று விதித்திருந்தும், ‘விருந்து’ எனப் பல துறைகளினும் முட்டின்று செல்ல வழியேற்படுத்தியிருந்தும், அவற்றையெல்லாம் நாம் நமதாக்கிக்கொள்ளவில்லை. பிறமொழிகட்கும், அவற்றையுடையார்க்கும் நாம் என்ன கடன் கொடுத்திருக்கிறோம் என்பதைச் சற்றேனும் நோக்காமல், கண்மூடி நமதுடைமையெல்லாம் பிறரிடமிருந்து கொண்டதே என்ற தவறான மேற்கோளொன்றை விடாமற் கைக்கொண்டிருக்கிறோம். அதை இனி முற்றும் விடுத்து, உண்மைநிலை நோக்கலே நம் கடமைகள் பலவற்றினும் முதன்மையானதாய்க் கொள்ளல்வேண்டும்.

அன்பர்களே!

ஆங்கிலம் மிகுத்த பிறகு நம்மவர் பல துறைகளிலும் வெளியிட்ட புது நூல்கள் மிகச் சிலவே. அவற்றிற் பெரும்பாலன இன்பச் சுவை தழுவியவே. இப்போது தமிழ்மொழியின் இயற்கைநிலை யுண்மையும், ஒலி யிலக்கணமாண்பும், உலகத்து மனிதரால் வழங்கு மொழிகளேயன்றி, விலங்கு பறவை முதலியவற்றின் ஒலிகளையும் எளிதில் ஆய்தவெழுத்தின் நுணுகிய ஆற்றலால் தமிழ் மொழியில் வெளியிடக் கூடுமென்ற ஆராய்ச்சிகளும் தமிழுலகு உய்யுமாறு வெளி வருகின்றன. தொல்காப்பியமாம் பெருநிதிக் குவியலைக் கிண்டுதோறும், அதில் இணையிலாக் கலன்கள் கிடைக்கின்றன. குவியலின் அளவோ எல்லையற்றது! கலன்களும் எண்ணிறந்தன! அவை தேடிச் செல்வோர் மிகச்சிலரே!

அதனால் தமிழ்மக்கள் ஒருங்கு கூடித் தொல்காப்பியம் ஒன்றேயல்ல— இன்னும் அதையொத்த சிறந்த நூல்கள் எத்தனையோ இருக்கின்றனவே!— அவற்றைத் துருவியாயின் சிறுபோதிலேயே உலகம் வியக்கத்தக்க நூல்கள் பல துறைகளிலும் வெளியிடுதல் கூடுமே! நம்மொழியும் இறைக்க விறைக்க மாளாத கல்வியூருணியா யிருப்பதற்கு ஐயமும் உண்டோ?

ஆராய்ச்சித் தொழிலோடு, நாம் முன் வரச் செய்யுந் தொழில்களில் முதலாகவும், காலந் தாழ்க்காமலுஞ் செய்யவேண்டிய தொண்டொன்றுண்டு. அதாவது, நமக்குச் சேமநிதியமாயிருக்கின்ற சங்க இலக்கியங்களையும், பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் கையிலும் எளிதில் எட்டும்படிச் செய்வதோடு, இனி அவை என்றும் அழியா நிலையில் வைக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்தலும் ஆம். மற்றத் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் பாகுபடுத்திச், செவ்விய இலக்கியங்கள் இவையென எல்லோரும் அறியும்படித் தக்கோரால் பதிப்பிடுதலும் வேண்டும். நூற்களை யொரு வழியாக்கியதும், நம்மயலாராகிய ஆந்திரர், மாராட்டியர், வங்காளர் முதலியோர் வெளிப்படுத்தியிருப்பன போல், நாட்டாள்களும் திங்கட்டாள்களும் நல்ல நடையில் எழுதுவித்து, நாடெங்கும் பரவச் செய்வதும் வேண்டும். நாட்டாள்கள் இப்போது பல விருப்பினும், அவை யெல்லாம் பேருக்குத் தமிழாயிருக்கின்றன. அவற்றின் நடை, நோக்கம் முதலியவை யனைத்தும் தமிழல்லாதவையாயிருப்பதோடு, இன்னலுக்கே அதிகமும் பொருட்டாயிருக்கின்றன. அவற்றின் பதிப்பாளர் நமக்கு இன்றியமையா வேற்று நாட்டுச் செய்திகளைப் பெயர்த்தெழுதும்போது, கண்டபடியெல்லாம் வேற்றுச்சொற்களைத் தமிழென்று புகுத்திவிடுகின்றனர். வேற்று மொழிச் சொற்களுக்குத் தமிழில்லை யெனக் கற்பித்துத், தக்க சொற்கள் அவ்வப்போது ஏற்படுவதுங் கெட, மொழிக்கே கேடுவிளைக்குந் தன்மையவாகிய புழுக்களை யொத்து, வேற்றுச் சொற்களையும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனதால், பல நிலைகளிலுமிருக்கும் தமிழ் மக்கள் நன்கு உணரவும், அத்தாட்களின் நடையையே யாவரும் தமக்குப் படியாகக் கொள்ளுமாறும் அவை தக்கோரால் பதிப்பிக்கச் செய்வது நங்கடமை.

திங்கட்டாள்கள், மேனாட்டார்வெளியிடுவனவேபோல், அத்தகைச் சீருஞ் சிறப்பு முடையவையாய், நம்மயலாரால் வெளியிடப்படுகின்றன. நமக்கும் என் அத்தகைய தாட்களிருத்தல் கூடாது? இருத்தல் வேண்டும். இவையனைத்தும் நமக்கு நாமே செய்து கொள்ளவேண்டியவை யல்லவோ?

இனி, நமக்குத் தனித் தமிழ்க் கல்லூரிகளும் வேண்டும். அவை நாம் வேண்டுவது வியப்பன்று. தமிழ்க் கல்விக்கென்றும், தமிழ்ச் சமய

நூற்கள் கற்பதற்கென்றும் எத்தனையோ நிதியம் நம் முன்னோர் ஈட்டி வைத்தனர். அவை யெல்லாம் தகார் பலர் கையிற் பட்டு, வேண்டிய வழியினுதவாமல் வீணாகின்றன. தமிழுக்கெனச் சேமித்த பொருள், வேற்று மொழி வளர்க்கவும், தமிழைப் பழிக்கும் மாற்றாருண்ணவு மாயிற்று! வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகட்குத் தனிக் கழகங்கள் பலவிடத்தும் நிறுவிய நாம், நம் மொழிக்கென எத்தனை ஏற்படுத்தி யிருக்கின்றோம்?

